[30th April 1959

THE HON. SRI P. KAKKAN : அங்கே இருக்கக்கூடிய கிராமங்களில் ஹை ஸ்கூல்களில் படிக்கக்கூடிய மாணவர்கள் அதிகமாக இருக்கலாம். இந்த வருஷம் ஒரு வேளை ஜாஸ்தியாக சேர்ந்திருக்கலாம்.

SRI P. S. CHINNADURAI : கன்யாகுமரி ஜில்லாவில் மிகக் குறைவான தொகை கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இப்படிப்பட்ட ஒரு குறை இருப்பதாகத் தெரியவருகிறது. இந்த வருஷமாவது அந்தக் குறையைப் போக்குவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : எங்கெல்லாம் மாணவர்கள் அதிகமாக இருக்கிறார்களோ அங்கே குறைவாகப் பணம் கொடுக்கப்படும். அதிகப்படியான அப்ளிகேஷன் வந்தால் பணம் குறைவாகத்தான் இருக்கும்.

Welcome addresses presented by the Municipalities in North Arcot district

* 279 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ஸ்தல-ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1956–1957, 1958 மார்ச்சு 20-ம் தேதி வரை வடாற்காடு ஜில்லாவிலுள்ள நகரசபைகளின் சார்பில் யார் யாருக்கு வரவேற்புக் கொடுக்கப்பட்டது ?

(ஆ) ஒவ்வொரு வரவேற்புக்கும் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

SRI K. VINAYAKAM : Sir, have the Government issued any
1-30 p.m. instruction to the municipalities as to the guiding principles on which the welcome address should be presented to the various personalities in our State? Does it encourage the political leaders to be welcomed by the parties, if they happen to gain some majority inside the councils?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : A separate question may be put.

* 280 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of SRI V. K. KOTHANDARAMAN) : கனம் ஸ்தல-ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வேலூர் நகரசபையில் 1957-ம் ஆண்டில் யார் யாருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது ?

(ஆ) எந்தெந்தத் தேதியில் ?

(இ) வரவேற்புக்களுக்கான ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) to (*c*) A statement [b] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix V on pages 804–806 infra.

[b] Printed as Appendix VI on page 806 infra.